பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி – சென்னை – 4

09.08.2025 6.45

சனிக்கிழமை காலை

## தலைப்புச் செய்திகள்

1. உள்நாட்டில் சமையல் எரிவாயு விலை கட்டுக்குள் இருப்பதை உறுதிப்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

2. நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் இன்று நடைபெறும் மூவர்ணக் கொடி யாத்திரையை தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்கர் டாக்டர் எல். முருகன் தொடங்கி வைக்கிறார்.

3. சமூக வளர்ச்சிக் குறியீடுகளில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக திகழ்கிறது என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

4. தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு தொடர்ந்து மோசமடைந்து வருவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

5. தாய்லாந்தில் நடைபெறும் ஆசிய இளையோர் குத்துச்சண்டைப் போட்டியில் மகளிர் பிரிவில் இந்தியர்கள் 7 பேரும், ஆடவர் பிரிவில் 3 பேரும் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளனர்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

உள்நாட்டில் சமையல் எரிவாயு விலை கட்டுக்குள் இருப்பதை உறுதிப்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

இதற்காக எண்ணெய் நிறுவனங்களுக்கு 30 ஆயிரம் கோடி ரூபாய் வழங்க சமீபத்தில் மத்திய அமைச்சரவை எடுத்த முடிவு வரவேற்கத்தக்கது என்று சமூக வலைதளப் பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச அளவில் சமையல் எரிவாயு விலை 63 சதவீதம் உயர்ந்துள்ளபோதிலும் உள்நாட்டில் விலையை உயர்த்தாமல் தாய்மார்கள் மற்றும் சகோதரிகளை மத்திய அரசு பாதுகாத்து வருவதாக அவர் கூறினார்.

அண்டை நாடுகளில் விற்கப்படும் விலையில் கிட்டத்தட்ட பாதியளவு விலையில்தான் இந்தியாவில் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விற்கப்படுவதாகவும் திரு. ஹர்தீப் சிங் புரி கூறினார்.

-----------

நாடு முழுவதும் வரும் 15ஆம் தேதி 79வது சுதந்திர தினம் உற்சாகமாக் கொண்டாடப்பட உள்ளது.

இதையொட்டி நாட்டு மக்களிடையே தேசப்பற்றை ஏற்படுத்தும் வகையில் இல்லம்தோறும் மூவர்ணக்கொடியேற்ற மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் இன்று நடைபெறும் மூவர்ணக் கொடி யாத்திரையை தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தொடங்கி வைக்கிறார்.

தியாகமே உருவான மூவர்ணக் கொடி யாத்திரையில் பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்துகொள்ள வேண்டும் என்று அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

<<<<>>>>

சமூக வளர்ச்சிக் குறியீடுகளில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக திகழ்கிறது என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், வறுமை இல்லாத மாநிலமாகவும் தமிழகம் விளங்குகிறது என்று கூறினார்.

வளம் கொழிக்கும் மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்க அனைவரும் உறுதியேற்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

-----------

அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியத்தின் சார்பில் நடப்பாண்டு ஆட்டோ ஓட்டுநர்கள் ஆயிரம் பேருக்கு ஆட்டோக்கள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று தொழிலாளர் நலத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 100 பெண்கள் மற்றும் திருநங்கை ஓட்டுநர்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் மானியத்துடன் புதிய ஆட்டோக்களை வழங்கி அவர் பேசினார்.

நாட்டிலேயே தமிழகத்தில்தான் மகளிர் மற்றும் திருநங்கைகளுக்கு ஆட்டோ ஓட்டுநர் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்களுக்கு மானியத்துடன் கூடிய ஆட்டோக்கள் வழங்கப்படுவதாக அவர் கூறினார்.

கடந்த ஆண்டு 500 மகளிருக்கு மானியத்துடன் கூடிய ஆட்டோக்கள் வழங்கப்பட்டதாகவும் திரு. உதயநிதி ஸ்டாலின் கூறினார்.

-----------

திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோவிலில் நேற்று பௌர்ணமியை முன்னிட்டு லட்சக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் வந்தனர்.

மழையையும் பொருட்படுத்தாமல் அண்ணாமலையார், உண்ணாமலையார் அம்மனை வழிபட்டு 14 கிலோ மீட்டர் நீளமுள்ள அண்ணாமலையை சுற்றிவந்தனர்.

இதை முன்னிட்டு திருவண்ணாமலையில் விரிவான பாதுகாப்பு எற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

-----------

தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு மட்டும் 868 நபர்களிடமிருந்து உடல் உறுப்புகள் தானம் பெறப்பட்டு பல உயிர்கள் காப்பற்றப்பட்டுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாற்று சிறுநீரகம் பொருத்துவதற்காக 7 ஆயிரத்து 487 பேர் காத்திருப்பதாகவம், கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைக்காக 470 பேர் காத்திருப்பதாகவும் கூறினார்.

இதயம், எலும்பு மஜ்ஜை, தோல், கருவிழி உள்ளிட்ட உடல் உறுப்புகள் தேவைப்படுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், மூளைச்சாவு அடைந்தவர்களின் உடல் உறுப்புகள் இவர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்று கூறினார்.

உடல் உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வு அதிகரித்துள்ளதால், ஆன்-லைன் மூலம் 14 ஆயிரத்து 300 பேர் தாங்கல் இறந்த பிறகு உறுப்பு தானம் செய்ய ஒப்புக்கொண்டு படிவங்களை வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

<<<<>>>>

தமிழக கல்விக் கொள்கை, தேசியக் கல்விக்கொள்கையின் நகலாக உள்ளது என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

தென்காசியில் நேற்று நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேசிய கல்விக்கொள்கையில் உள்ள மும்மொழிக் கொள்கையைத் தவிர மீதமுள்ள 95 சதவீத கருத்துகள் மாநில கல்விக் கொள்கையிலும் இடம்பெற்றுள்ளதாக தெரிவித்தார்.

தென்காசி காசி விஸ்வநாதர் ஆலயத்தை இந்துசமய அறநிலையத்துறை முறையாக பராமரிக்காத காரணத்தால் ராஜகோபுரத்தில் இருந்து கலசம் விழுந்ததாகவும் அவர் கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு தொடர்ந்து மோசமடைந்து வருவதாகவும், கடந்த 6 மாதத்தில் 6 காவலர்கள் கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

விருதுநகரில் நேற்று பிரச்சாரம் மேற்கொண்ட அவர், மாநிலத்தில் கொலை, கொள்ளை, திருட்டுச் சம்பவங்களும் அதிகரித்துள்ளதாக குறை கூறினார்.

குற்றவாளிகள் மீது காவல்துறையினர் விரைந்து நடவடிக்கை எடுத்திருந்தால் குற்றங்கள் குறைந்திருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

பொதுமக்கள் ஏற்கனவே அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வால் அவதிப்படும் நிலையில் மின்கட்டண உயர்வு

அவர்களை மேலும் பாதிப்புக்கு ஆளாக்கியுள்ளது என்றும் திரு. பழனிசாமி கூறினார்.

------------

பாமக பொதுக்குழுவுக்கு தடை விதிக்கக் கோரி அக்கட்சியின் நிறுவனர் மருத்துவர் ச. ராமதாசு தாக்கல் செய்த மனுவை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

திரு. அன்புமணி ராமதாஸ் தலைமையில் இன்று மாமல்லபுரத்தில் நடைபெறும் பொதுக்குழுவுக்கு தடைவிதிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்த சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ், உட்கட்சி விவகாரம் என்பதால் அனைத்து வாதங்களையும் கவனத்தில் கொண்டு இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

பொதுக்குழு சட்டவிரோதமாக கூட்டப்பட்டுள்ளதா என்பது குறித்து சிவில் வழக்குதான் தீர்மானிக்க முடியும் என்றும் அவர் தெளிவுபடுத்தினார்.

**<<<<>>>>**

***<u>இருவரிச் செய்திகள்</u>***

பாலஸ்தீனத்தை தனி நாடாக அமெரிக்கா அங்கீகரிக்காது என்று அந்நாட்டின் துணை அதிபர் திரு. JD Vance தெரிவித்துள்ளார்.

---------

சகோதரத்துவத்தைப் போற்றும் ரக்ஷாபந்தன் பண்டிகை இன்று நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது.

---------

ஜார்கண்ட் மாநிலம் Chandauli - Garhwa இடையே சுமார் நான்கரை கிலோ மீட்டர் நீளமுள்ள சரக்கு ரயில் சோதனை ஓட்டம் நேற்று வெற்றிகரமாக நடைபெற்றது.

---------

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் கைத்தறி நெசவாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் திரு. ஆர். காந்தி வழங்கினார்.

---------

சென்னை ஐ.ஐ.டி.யில் பயிற்றுவிக்கப்படும் நான்கு வார AI சான்றிதழ் படிப்பை தூத்துக்குடி மாவட்ட மாணவர்கள் சேர்ந்து படிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என்று மாவட்ட ஆட்சியர் திரு. இளம் பகவத் தெரிவித்துள்ளார்.

---------

கன்னியாகுரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம் வட்டத்திற்கு உட்பட்ட வடக்கு தாமரைக்குளம் சாமித்தோப்பு பகுதியில் அம்மாவட்ட ஆட்சியர் திருமதி அழகுமீனா விவசாயிகளை சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டறிந்தார்.

---------

தருமபுரி மாவட்டத்தில் தேசிய குடற்புழு நீக்க நாளை முன்னிட்டு வரும் திங்கட்கிழமை குழந்தைகளுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்கப்படும் என்று மாவட்ட ஆட்சியர் திரு. சதீஷ் தெரிவித்துள்ளார்.

---------

கரூர் கல்யாண பசுபதீஸ்வரர் ஆலயத்தில் நேற்று நடைபெற்ற ஆடி மாத திருக்கல்யாண திருவீதி உலாவை ஏராளமான பக்தர்கள் கண்டு தரிசித்தனர்.ஸ

---------

சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தில் காவல்துறை விசாரணையின்போது மரணமடைந்த அஜித்குமார் குடும்பத்தினருக்கு கூடுதல் நிவாரண நிதியாக 25 லட்சம் ரூபாய்க்கான காசோலையை மாநில அமைச்சர் திரு. பெரிய கருப்பன் நேற்று வழங்கினார்.

---------

விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு அருகே மேற்குத்தொடர்ச்சி மலையில் எரியும் காட்டுத் தீயை அணைக்கும் முயற்சியில் வனத்துறையினர் ஈடுபட்டுள்ளனர்.

---------

சென்னை பிராட்வேயில் உள்ள பாரதி மகளிர் கலை அறிவியல் கல்லூரியில் நேற்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் ஆயிரத்து 312 மாணவிகளுக்கு பட்டங்களை

உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கோவி. செழியன் வழங்கினார்.

---------

*விளையாட்டுச் செய்தி*

தாய்லாந்தில் நடைபெறும் ஆசிய இளையோர் குத்துச்சண்டைப் போட்டியில் மகளிர் பிரிவில் இந்தியர்கள் 7 பேரும், ஆடவர் பிரிவில் 3 பேரும் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளனர்.

இதனால் இந்தியாவுக்கு தங்கம் அல்லது வெள்ளிப் பதக்கம் கிடைப்பது உறுதியாகியுள்ளது.

மகளிர் 54 கிலோ எடைப்பிரிவில் நிஷா, 57 கிலோ எடைப்பிரிவில் முஸ்கான், 60 கிலோ பிரிவில் மினி, 75 கிலோ எடைப்பிரிவில் ஆர்த்தி குமாரி, 80 கிலோ பிரிவில் Parchi Tokas, 65 கிலோ எடைப்பிரிவில் Mausam Suhag ஆகியோர் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளனர்.

ஆடவர் 75 கிலோ எடைப்பிரிவில் Rahul Kundu, 90 கிலோ எடைப்பிரிவில் Hemanth Sangwan ஆகியோர் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளனர்.

-------------

துரந்த் கோப்பை கால்பந்துப் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஒருங்கிணைந்த வடகிழக்கு அணி 2-1 என்ற கோல் கணக்கில் ஷில்லாங் அணியை வென்றது.

<<<<The End>>>>